288

பதிவு எண்—M5720. வெள்ளிக்கிழமையில் குருகுலத்தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

5 AUG

ஆசிரியர் : இளவழகனுர்.

5—கின குருதலப, மாம்பாக்கம்; விசய, ஆடி; 24—7—53 தளிா—43

குகுருலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

மலரினும் மெல்லியர்!

இல்வாழ்க்கை நாகரிகம் மிகக் கூர்மையான மென்மையுடையதாக இருக்கின்றது. அதன் அடிப்படைக் கடமை விருந்தோம்பலாதலின், அதனை மிக நளினமாக நம் முன்னேர் கையாண்டு பழகி யிருக்கின்றனர்.

வருகின்ற விருந்தினரை அனிச்சப் பூவினும் மெல்லிய உள்ளம் உடையவராக மக்கள் மதித்திருக்கின்றனர். கடமையுணர்வின்மேல் தமது இல்லத்தைவிட்டு, ஊரையுங் கடந்து வருகின்றனர் விருந்தினர்; உள்ளன்புடன் உவகையுடன் வரவேற்குமிடத்தில் மானத்துடன் மகிழ்வுடன் தங்கி இருபக்கமும் ஒப்புரவோடு உறவுகொண்டு ஒற்றுமையுடன் நன்றியுடன் அவர் திரும்புவர். தமது இல்லத்தில் தகுதியாகவும் நாகரிகமாகவும் வாழ்க்கை நடத்தி வருகின்ற அவர்கள், பிறர் உள்ளத்தின் அலைகளையும் நிலைகளையும் கூர்ந்து கவனிக்கும் மென்மையுடையவராகவே இருப்பார்கள்.

அத்தகைய மலரினும் மெல்லிய உள்ளமுடைய விருந்தினரை வரவேற்கும் முறை, சிறந்ததாயிருப்பது இன்றியமையாதது! நமது அகத்தின் நிலையை முகத்தால் அவர் இனிது தெரிந்து கொள்வர். அது பொருத்தமாயிருந்தால் நெருங்கி வருவர். மன அழுக்குகள் நான்கில், அழுக்காறு அவா வெகுளி என்னும் மூன்று அப்போது நீங்கி நிற்றலை அது தெரிவிக்கின்றது. விருந்தினர் நெருங்கி வந்தபின், இன்னச் சொல் என்னும் மற்ருெரு மன அழுக்கும் நீங்கி இன்சொல்லால் அளவளாவும்போது விருந்தினர் உள்ளம் மிகவும் ஒருமையுறுகின்றது. அதன் பின், உண்ண உறவாட வாய்ப்பு உண்டாகின்றது.

மனத்தின்கண் மாசில்லா வகையில் இவ்வளவு தூய்மையுடன் விருந்தோம்பலைப் பெறுகின்றவர், எவ்வளவு மெல்லியர்!

மோபபக் குழையும் அனிச்சம்,
முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

மோப்பக் குழையும் அனிச்சம்-அனிச்சப்பூ எடுத்து மோந்தால் மட்டும் வாடும், விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும்—ஆனல், முகம் சிறிது வேறுபட்டு நோக்கினுலும், வருகின்ற விருந்தினர் வாடி விடுவர்.

மோந்தால் குழையும் அவ்வளவு மென்மையுடையது அனிச்சப்பூ! அதைவிட விருந்தினர் மெல்லுள்ளம் உடையவர் என்பது, தொலைவிலிருந்து நோக்கினுலே குழைந்துவிடுவர் என்பதனுல் தெரிகின்றது.

உள்ளன்பில்லாதவர் முகம் தொலைவிலேயே திரிந்து தோற்றும். இன்சொல்லும் உணவு கொள்ளலும், நெருங்கி வந்தபின் நிகழ்வன. ஆதலால், விரும்பி வருகின்ற விருந்தினர்க்கு முதலில் முகங்கொடுத்து வரவேற்றல் முதன்மையாகின்றது.

அனிச்சம் என்பது அனிச்சப் பூவை உணர்த்துதலால் ஆகுபெயர்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள் — கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை	விசய, ஆடி,	தளிர்
5	25-7-53 வெள்ளி	43

விழா

நாட்டிலே பல குழப்பங்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. அனைவரும் அமைதி பெறும் சட்டதிட்டங்களுடன் வாழ்வு இனிது நடைபெறவில்லை. மாறுபட்ட கருத்துடையோரின் தாக்குதல்களும், மழையின்மை, வளமின்மை, தெளிவின்மை முதலிய குறைபாடுகளும் உலகியல் வாழ்வைத் தொல்லையாக்கி வருகின்றன.

இத் தொல்லையைத் திருமுறைப் பெருவிழா திருக்கழுக்குன்றத்தில் மூன்று நாட்களுக்கு மறக்கச் செய்தது.

மறக்கவைத்தது இக் குறைபாடுகளைக் கருதாமலல்ல. அவற்றை நிறைவு செய்யும் பொருட்டேயாம். உலகியலைச் செம்மைப் படுத்த வல்லது இவ் விழாவே என்பது ஆசிரியர் அவர்களின் துணிவு. அருளியல் தொடர்பின்றி உலகியலைச் செம்மைப்படுத்த முடியாதென்பதே இம் முடிவுக்கு அடிப்படை. இவ் விழா திருவருளையே நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகிறது. எல்லாத் துறையினரும் இதில் ஈடுபட்டுத் திருவருள் துணைகொண்டு உயர்வதற்குத் தக்க அமைப்புகள் செய்யப்பட்டு வளர்ந்து வருகின்றன.

சீர்திருத்தங்களைத் திணிப்பதை விட மக்கள் உள்ளத்தைப் பண்படுத்துவது நல்ல முன்னேற்றத்தைத் தரும். அருட்பாடல்களே பண்பை வளர்க்க ஏற்றவை. அவையும் கருத்து விளங்க, இசையொடு புகட்டப்படும்போது நம் உள்ளங்களில் எளிதாகவும், உரமாகவும், உணர்ச்சியுடனும் பதிவதால் இவ் விழாவில் இசைக்கு முதன்மைதரப்பட்டது. "தமிழ் வேத இன்னிசைப் பெரு விழா" என்றே இது அழைக்கப்பட்டது. இசை எவ்வாறு நம்மை நான்காவது உயர் நிலைக்கு (துரிய நிலைக்கு) அழைத்துச் செல்ல உதவுகிறது என்பதைச் சேனிப்பு வகுப்பில் ஆசிரியர் அவர்கள் விளக்கியருளினர். அருள் நூல்களை மக்களிடையே பரப்பி மன்பதையைப் பதப்படுத்த இன்னின்ன கடமைகளை இசைவல்லுநர் மேற்கொள்ளவேண்டுமென்று ஆசிரியர் அவர்கள் தெரிவித்ததும், இசைத்துறையில் சிறந்தவரான திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் இதில் ஈடுபட்டு, மேலும் உழைப்பெடுக்கும் குறிப்புடையோராய் இருப்பதும், இனி அருட்பாடல்கள் மக்களிடையே பரவி நற்பயனைத் தரும் என்னும் நம்பிக்கையை ஊட்டுகின்றன.

தேர்த் திருவிழாக்களுக்குக் கூடுவதைப்போல இவ் விழாவிற்கும் மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டனர். கூட்டம் மேலும் மேலும் பெருகி வரும் குறிப்பும் காணப்படுகிறது. இதற்கு உணவிடுவோரின் வள்ளன்மை பேருதவியாய் உள்ளது. இப் பெருகிவரும் கூட்டத்தின் குறிக்கோள் வேடிக்கைக் காட்சியாக இல்லை. அது அறிவியல், அருளியல் நாட்டமாய் இருந்தது.

தக்கார் தலைமையில் பல அரிய சொற்பொழிவுகளைக் கொண்ட பேரவை ஒன்றும் நடைபெற்றது இப் பேரவையில் உயிர்ப்பு இருந்தது. திரு. ஆறுமுக நாவலரவர்களால், முப்பொருள் உண்மை அளவைகளோடு விளக்கிக் கற்பிக்கப்பட்டது.

இது, உலக விழாவாக நடைபெறவேண்டுமென்பது ஆசிரியர் அவர்களின் நீண்டநாட் பெரு விருப்பம். இவ்வாண்டு, ஈழத்துப் பெருவணிகராய் இருந்து, அண்மையில் துறவு பூண்டு, மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளின் ஆதீனத்துத் தலைவரான, திருப்பெருந்திரு சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் இப் பேரவையைத் தலைமை தாங்கி நடத்திவைத்தது இதனைத் தென்னாட்டு விழாவாக விளர்த்திருக்கிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

திருக்கழுக்குன்றத் திருமுறை இன்னிசைப் பெருவிழா நிகழ்ச்சிகள்

வழக்கம்போல் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் திருக்கழுக்குன்றத்தில் திருமுறைப் பெருவிழா ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தை ஒட்டி 10-7-53 முதல் 14-7-53 வரை இயலிசை விழாவாகச் சிறப்புற நடைபெற்றது.

திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட இடம் திருச்சிற்றம்பலம் என்னும் வரலாற்று முறையை ஒட்டி, இவ்வாண்டு விழாவுக்கு "வடதிருச்சிற்றம்பலம்" என அருணகிரியார் தமது திருப்புகழிற் சிறப்பிக்கும் மாம்பாக்கம் குருகுலத்திலிருந்து (மதுராந்தகத்தை அடுத்துள்ளது) திருமுறைகள் யானைமேல் ஏற்றப் பெற்றுப் பிள்ளையார் மாணிக்கவாசகர் திருவுருவங்களுடன் திருக்கழுக்குன்றத்துக்கு (18 கல் தொலைவு) இடையிலுள்ள ஊர்களில் திருவுலாச் செய்விக்கப் பெற்று எடுத்து வரப்பட்டன. நூற்றுக்கு மேற்பட்ட சென்னை அன்பர்களும், பிறரும் உடன் அன்புடன் நடந்து வந்தது குறிப்பிடத்தக்கது. திருமுறைப் பொருளாக உள்ள மதுராந்தகம் கடப்பேரித் திருவெண்காட்டீச்சுரர் 10-7-53 வெள்ளியன்று காலை குருகுலத்திற்கு எழுந்தருளினர். சிறந்த மண்டகப்படி முறையில் திருமுழுக்கு வழிபாடு முதலியன கொண்டு மாலையில் விடையூர்தியில் நல் விழாக் காட்சியளித்தனர். திருமுறைகளோடு மீட்டும் மதுராந்தகம் வரையில் திருவெண்காட்டீச்சுரர் எழுந்தருள, வழிவிட்டருள, யானை அப்பெருமானைத் திருமுறைகளுடன் மும்முறை வலம் வந்து விடைபெற்றுக் கொண்டது. இச்சிறப்பும், வழி நெடுக மதுராந்தகத்திலும், கருங்குழியிலும், வல்லிபுரத்திலும், வழுவத்தூரிலும், திருக்கழுக்குன்றத்திலும் ஆங்காங்குள்ள பெருமக்கள் திருமுறைகளையும் உடன் வந்த உடையவர்களையும், அடியார்களையும் வரவேற்று மண்டகப்படி வழிபாடுகளும் சிற்றுண்டியும், உணவும், சுவை நீரும் செய்து மகிழ்வித்த மேன்மையும் மறக்ற்பாலன அல்ல. ஏற்பாட்டின்படி திருமுறை புறப்பாட்டைச் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை B. A., L. T., அவர்கள் வந்திருந்து சிறப்பித்துக் காலங்கடந்த நேரத்திலும் கருங்குழி வரை உடன் வந்து சொற்பொழிவாற்றி நூற்றுக்கணக்கான சிற்றூர் மக்களை மகிழ்வித்தார்கள்.

திருக்கழுக்குன்றத்தை அடைந்ததும், 11-7-53 சனியன்று மாலையில் அவ்வூர் மெய்கண்டார் திருத்தொண்டர் கழகத்தார் வரவேற்பு ஏற்பாடுகளைச் சிறக்கச் செய்து மேள தாளங்களுடன் குடை கொடிகளுடன் எதிர்கொண்டு வந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழியில் திரு. காமு நாயகர் அவர்கள் அன்பர்களுக்கு நடந்து வந்த களைப்புதீரச் சூடான சுவை நீர் கொடுத்து மகிழ்வித்தார். மெய் கழகத்தார் சார்பிலும், செங்கற்பட்டு அருள்நெறியன்பர் சார்பிலும் அடிவாரத்தில் வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பட்டன. மாலைகள் அணிவிக்கப் பெற்றன. பின்பு தாழக் கோயிலை வழிபாடு செய்து திரிபுரசுந்தரியின் திருக்கோலக் காட்சி கண்டு மக்கள் மகிழ்ந்தனர்.

மாம்பாக்கத்திலிருந்து வந்தவர்கள் எல்லாருக்கும் மெய்கண்டார் திருத்தொண்டர் கழகத்தொண்டர் திரு. சுப்பிரமணியனார் அவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி வழங்கப் பட்டது.

மறுநாள் 12-7-53 ஞாயிறன்றுகாலை சென்னையிலிருந்தும் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் ஆயிரமாயிரம் அன்பர்கள் திருக்கழுக்குன்றத்தில் ஈண்டினர். திருப்புகழ்மணி அவர்கள் தமக்கே உரிய தனிமுறையில் திருப்படி விழாவாக பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட இசை முழக்கத்தோடு திருவருள் உணர்ச்சியை எழுப்பும் இனிய பாடல்களையும், தொடர்களையும், விளக்கஉரைகளையும் வழங்கி வர எல்லோரும் மலை இவர்ந்தனர். ஆசிரியரவர்களோடு உச்சிச் செல்வனை வழிபட்டு, கழுகுக் காட்சி கண்டு திரும்பினர்.

பிற்பகல் 5 மணிக்கு மீண்டும் ஆசிரியரவர்களோடு மலைவலமாகச் சொக்கம்மை மலைச்சாலை அடைந்தனர். ஆசிரியரவர்களின் அரிய உரைகளைக்கேட்டுத் திருவருளில் திளைத்தனர். இரவு 9 மணிக்குமேல் அடிவாரத்தில் நாகர் கோயில் 'தொண்டன்' இதழாசிரியர் திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்களின் "பதி பசுபாச விளக்கம்" என்னும் அரிய பெரிய சொற்பொழிவினைக் கேட்டு மகிழ்ந்தனர்.

13-7-53 திங்களன்று காலை 10 மணிக்கு அடிவாரத்தில் மதுரைத் திருஞானசம்பந்தர் திருமடத்தின் இளவரசாக அமர்ந்துள்ள திருவருள் தவ யோக சிவத்திரு. சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமி களின் தலைமையில் திருமுறைப் பேரவை தொடங்கியது. அண்ணாமலை நகர் திருமதி. இராசேச்சுவரி சுவாமிநாதன் அவர்களும் ஆறுமுக நாவலர் அவர்களும் முறையே 'திருவாசகம்' 'திருவாசகமும் மணிவாசகரும்' என்னும் தலைப்புகளில் இன்பம் மீதூரச் சொற்பொழி வாற்றினர். பிற்பகல் 5 மணிக்கு மீண்டும் கூட்டம் தொடங்கியது. முதலில், இந்தியப்பாராளுமன்ற உறுப்பினரும் சென்னைக் காலக்ஷேத்திரத் தலைவருமாகிய திருமதி. உருக்குமணி அருண்டேல் அவர்கள் சிற்றுயிர்க் கொலையின் சின்னபின்னங்களைத் தடுக்கும் சட்டமொன்றைத் தாம் கொண்டு வர இருப்பது பற்றி விளக்கிப்பேசி அசாகு அங்கே கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றார்கள். அடுத்து, அண்ணாமலை நகர், திரு. பு. ர. சுவாமிநாதன் M. A L T., அவர்களும், திருமுருக கிருபாநந்த வாரியார் அவர்களும் முறையே 'மூவர் வகுத்த வழி' 'ஒருவாசகம்' என்னும் தலைப்புகளில் மகிழ்வு மிக்க சொற்பொழிவாற்றினார்கள்.

மொத்தத்தில் திருமுறைப் பேரவைக்கு என் திருமுறை விழாவுக்கே தலைமை தாங்கிய அடிகளாரின் தோற்றப் பொலிவோடு கூடியபல பெருந்தகைமையினும், அவர்களின் இரு சிறகுகளைப் போல இருந்து நாடெங்கும் சுற்றி அரும்பெரும் சமயப் பணியினைப் 'பிரசார' முறையில் செய்து வரும் நாவலர் வாரியார் இவர்களின் இணைப்பினாலும், செந்தமிழ்ச் சிவநெறித் தம்பதிகள் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாக இலகும் திரு சுவாமிநாதன் தம்பதிகளின் வரவாலும் பெருஞ் சிறப்புற்றது.

14-7-53 செவ்வாய்க்கிழமை ஆனிமகத் திருநாள். காலையில் பிள்ளையார் வழிபாட்டுக்குப் பின் திருமுறைகள் ஒப்பனை செய்யப் பெற்ற அம்பாரியில் யானை மேல் ஏற்றப்பட்டு பிள்ளையார் மாணிக்க வாசகர் நால்வர் திருவுருவங்களுடன் தாழக் கோயிலிலிருந்து புறப்பட்டன. அணியணியாகப் பலவூர்த் தேவார சபையினரும் ஆடவரும் மாதரும் திருவருட் பாடல்களைப் பேரன்புடன் ஓதிக் கொண்டு தொடர்ந்தனர். திருக்கழுக்குன்றத் தாழ்வரை அருளிசைச் சூழலாயிற்று.

சஞ்சீவி மலைச் சாரலில் உள்ள திருவடிக் கோயிலை அடைந்ததும், அங்கே திருவடி வழிபாடு நடைபெற்றது. குருகுலச் சார்பில் மயிலைத் திருவள்ளுவர் கோயில் அறங்காவலர் திரு. சங்கரலிங்கஞ் செட்டியார் 'பொதுமறை விளக்கம்' என்னும் திருக்குறட் பாயிர விளக்க நூலை வெளியிட்டார். பிறகு ஏற்பாடு செய்திருந்தபடி திருநெறித் தமிழிசைச்செல்வர். திரு. க. நடராசன், திரு ரா. பாலசுந்தரம் இவர்களும், திருநெறித் தமிழிசை வேந்தர் புதுவை. ஆ விநாயகமுதலியார், காஞ்சி திரு. புண்ணிய கோடி இவர்களும் மிகவும் மன நிறைவு கொள்ளும்படி திருமுறை இசையரங்குகள் நடத்தினர்.

கூடியிருந்த ஆயிரக்கணக்கான அடியார்களுக்கும் அங்கேயே பகல் உணவு, கதம்பச்சாம்பார் தயிர்ச் சாதங்களாக "வன போசனம்" போல் வழங்கப் பட்டது. இந்த அரும் பெறல் வள்ளன்மையைக் கண்டு வியவாதார் போற்றாதார் ஒருவருமில்லை!

மீண்டும் சென்னை இசை வள்ளல் திரு. சி. சங்கரலிங்கம், திரு. அருணாசலம் இவர்களும், இசைச்சோதிமணி இரத்தினவேலர், அன்னார் மாணவர் இராயபுரம் இறைப்பணிக் கழக அன்பர்கள் இவர்களும், இசையரங்குகள் இனிய நிகழ்த்தினர். இடையில் சிறிது நேரம் திரு. வேதாசலம் செட்டியார் தலைமையில் சென்னை அருணகிரிநாதர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு,:: சென்னை 1

விழாவிற் கண்ட விழுமிய நிலைகள்

(தமிழ்ச் சிறுவன்.)

மாம்பாக்கத்திலிருந்து திருமுறைகள் கொண்டுவரப் பட்டதால் வழிநெடுகப்பல சிற்றூர்களில் விழாப் பற்றிய பெருங்கிளர்ச்சியும் பலருடைய ஈடுபாடும் இருந்தன.

திருக்கழுக்குன்றப் பெருமக்கள் பலர் இவ்வாண்டு விழாவில் பெரிதும் ஈடுபட்டு உதவியும் ஊக்கமும் ஊட்டினர்கள். சிவாசாரியார்கள் இணக்கம் போற்றத்தக்கது. குருகுல அன்பர் திரு. சுப்பிரமணியனார், திருக்காமுநாயகர் அவர்களும், வழக்கம் போல் திருக்கோயில் தருமகர்த்தர்களும், குறிப்பாகத் திரு. பாலசுந்தரநாயகர், அன்னார் இளவல் திரு. சருமலிங்கநாயகர் அவர்களும் பெரிதும் பாராட்டக்கூடிய நிலையில் ஈடுபட்டார்கள். திருக்கோயில் சார்பில் அடிவாரத்தில் பெரிய பந்தலை அமைத்துக்கொடுத்த சிறப்பும், மற்றும் பல உதவிகளை வேண்டியபடி செய்த தன்மையும் நல்ல ஊக்கத்தை ஊட்டின. பஞ்சாயத்து போர்டு அதிகாரிகளும், அலுவலர்களும், மின்சார அதிகாரிகளும் செய்த உதவிகளுக்கு நன்றி உரியதாகும். மலையைச் சுற்றியுள்ள பல பேட்டை மக்களும் இவ்வாண்டு நல்ல ஆதரவு காட்டியிருக்கிறார்கள். விழா நாட்களில் மாம்பாக்கம் குருகுலத்தினரும் நீர் மோர் வழங்கினர். சஞ்சீவி மலைச் சாரலில் தண்ணீர்ப் பந்தல் வைத்துப் பலர்க்கும் உதவிய தேவா. கன்னியப்ப முதலியாரும், திருவடிபீடத்தில் நடைபெற்ற இசையரங்குகளுக்குப் பலகை முதலியவைகளும், மின்சார உதவியும் செய்த தேசுமுகிப்பேட்டைப் பெருமக்களும் மிகுந்த நன்றிக்குரியவர்களாகினார்கள். நால்வர்பேட்டை திரு. சம்பந்தமுதலியார் திரு. பாலசுந்தரமுதலியார் திரு. சின்னையா முதலியார் முதலியோர் அவ்விடத்து நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்தியதோடு ஆர அமர நெடுநேரம் இருந்து செய்ய இயலாமற் போயிற்றே என்று மிகவும் ஏங்கினர். அவர்கள் அன்பும் முயற்சியும் பெரிதும் பாராட்டத்தக்கன.

சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்துக்கு ஒரு தவப்பேறாகத் திகழும் அதன் அமைச்சர் திரு. M. R. சம்பந்தம் அவர்கள் இந்த ஆண்டின் விழாவுக்குத் தனி முறையிற் பற்பல நன்முயற்சிகளைப் பேரூக்கத்துடன் தளராது ஆற்றியிருப்பது, தகுதியானதொன்று.

விழாவுக்கு வந்த பல்லாயிரக்கணக்கான அடியார்களும் சுற்றுப்புறப் பேரன்பர்களும் விழாவில் காட்டிய ஊக்கவுள்ளமும் ஆதரவு உள்ளமும் மறக்கற்பாலனவல்ல.

இனி தமிழகத்தின் தென்கோடியிலிருந்து நாவலரும், இதயம் போன்ற மதுரையிலிருந்து பரமாசாரிய சுவாமிகளும் நாடு முழுதும் சுற்றும் வாரியாரும் ஒன்றுபட்டு விழாவைச் சிறப்பித்ததும் இனிவரும் ஆண்டுகளிலும் இதனை மேலும் மேலும் சிறப்புற நடத்துதற்கு இணங்கியதும் கண்கொள்ளாக் காட்சியாகவும்; உளம் கொள்ளாப் பேருணர்ச்சியாகவும் இருந்தன. விழா தென்னாட்டு விழாவாக சிறப்பதற்கு ஏற்ற நிலைகளை இம்மூவரும் எளிதாக உண்டாக்கலாம்; உண்டாக்குவார்கள்.

தேவார உலகின் தனிப்பெருநிலையினர் திருநெறித் தமிழிசை வேந்தர் புதுவை. ஆ. விநாயக முதலியார் என்பதும், மரபு வழியில் தனிச்சோதியாகஇருப்பவர் இசைவள்ளல். திரு. சங்கரலிங்கம் என்பதும் இவ்விழாவில் தெளிவாகத் தெரிந்தன. திரு த. நடராசன் அவர்களும், திரு இரத்தின வேலர் அவர்களும் ஊக்கமூட்டிச் சிறப்பித்தால் முன்னுக்கு வரக் கூடிய நிலையினர் என்பதும் இனிது விளங்கின.

தேசிகர் அவர்களின் இசை நிகழ்ச்சி மிக்க கிளர்ச்சியைத் தந்தது. விழா திருமுறைவிழாவாதலின் அன்பர்கள் ஆர்வம் திருமுறைப் பாடல்களைக் கேட்க வெள்ளம்போற் பெருகியுள்ளது. தேசிகர் அவர்களும் திரு. விநாயக முதலியார் அவர்களும் அடுத்த அடுத்த ஆண்டுகளில் இசை நிகழ்ச்சிகளைத் தம் பொறுப்பில் மிகுதியாக ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருக்கின்றனர். அப்போது இந்த ஆர்வம் நிறைசெய்யப்பெறுமென்றும், திருமுறைகளுக்கு இசையுலகில் ஒரு தனி மதிப்பை அவர்கள் உண்டாக்குவார்களென்றும் நம்பலாம்.

விழா இவ்வாறெல்லாம் பல்லாற்றானும் சிறப்புற்று வளர்ந்தால் இத் தென்னாட்டு நாகரிகம், மொழி, சமயம், கலை இவற்றின் சிறப்புகள் அருளடிப்படையில் ஓங்கி உலகம் போற்றும் ஒப்பற்ற நிலையை மீண்டும் அடையும் என்பது ஒருதலை.

தேனிப்பு

(திருக்கழுக்குன்றத் திருமுறைப்பெருவிழாவில், 12-7-53 மாலை மலைச் சாரலில் நடந்த தேனிப்பில் ஆசிரியர் அவர்கள் கொடுத்த விளக்கத்தின் சுருக்கம்.)

யான் என்பது எது என்று எண்ணிக் கொண்டு போவது யானம். தியானம் என்பதும் ஞானம் என்பதும் அதுவே. அது மௌனமாக இருப்பதிலிருந்து வருகிறது. மனம் அடங்குவது மௌனம். நுகர்ச்சி (தோய்வு) நேரம் மௌனமாகும். ஏதாவது ஒன்றில் ஈடுபட்டால் பேச்சு நின்று விடுகிறது.

மனம் வெளியே வந்து பாயுந் தன்மையுடையது. அலையுந் தன்மையுடையது. மேற் போக்கான மனம்தான் வெளியே போவது. அடிமனம் என்பது வெளியே செல்லாமல் உள்ளே சென்று நல்லவற்றை எண்ணும்.

மனம் வெளியே போகக் கூடாதென்பது அதனைக் கட்டுப் படுத்துவதாகும். அது ஐம்புலன்களின் வழியாய் வெளியே செல்லும். அது வெளி வருவதற்கு இவ்வைந்து வழிகளைத் தவிர வேறு வழியில்லை. இவ்வைந்து புலன்களுள் உயர்ந்தது காது. மனம் இப்புலன் வழியே செல்லும்போது நுட்பத்தன்மை பெற்று அடிமனத்துடன் இயைகின்றது. அந்த நிலையில், மனம் வேலை செய்தாலும், அதனை மௌனமென்றே சொல்ல வேண்டும்.

மற்றப் புலன்களை மூடுவதைப் போலக் காதை மூடிவிட இயலுவதில்லை. காதின் வழியே மனம் செல்லுவது உலகியலை விட்டு உயர்ந்துபோகும் வழியாகும்.

உணர்ச்சி மற்றப் புலன்களின் வழி சிதறுண்டு போகாமல், ஒரு புலன் வழியாகத் துய்க்கும் வாய்ப்பு மனிதப் பிறவிக்கு உண்டு. மனத்தின் உரிமைக்குக் குறைவு நேராத வகையிலேயே அதனை அடக்கலாம். ஒதி உணர்வது மனத்தை அதன் இயல்பில் விட்டு அடக்குவதாகும். எனவே, மனத்தை அடக்க, தேனிக்க, நாம் பாடித்துய்க்க வேண்டும்.

திருக்கழுக்குன்றத்தில் திருமுறைகளைப் பாடவேண்டும். காதலோடு பாடினல் இறை தன்னைக் காட்டும். நால்வர் அருள் பெற்றவர் என்பதற்கு அடையாளம் அவர்கள் பாடியதாகும்.

தேனிப் பென்பது திருவருட் சுவையில் திளைப்பது. மனத்தின் வேகம் நுட்பத்தில் மிகும். பாடும்போது நுட்பத்தன்மையை அடையும் மனம், பாட்டு நின்ற பிறகும் நுட்பத்தில் மேலும் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும். பாடுகிற பொழுது அதன் பொருளை நன்குணர்ந்து அதைத் துய்த்தவர்களுக்கு இவ்வாறு நுட்பத் தன்மை தொடரும். அதற்கு அப்பாடல்கள் அருட்பாடல்களாக இருக்கவேண்டும்; அவை தேவார திருவாசகங்கள். இதை விளக்கவே இந்த விழா நடைபெறுகிறது. ஞானத்தைப் பெற இது வழி. ஞானம் என்பது, சொல்லிக் கொடுத்து வருவதன்று. அதனை உணர்ந்து உணர்ந்து தெளிய வேண்டும்.

மோனத்தில் நமக்குச் சுவை தட்டினல், தேனித்ததாகும். அச்சுவையைப் பெறுவதற்கு அருட்பாடல்களை ஓதுகிறோம்; இசையோடு பாடுகிறோம்.

வினை ஒத்தபின் மாணிக்கவாசகருக்குக் காட்சி கிடைத்தது. நம் அருட் போக்குக்கு வினை ஒத்து வரவேண்டும். அதாவது நம் செயல்கள் ஒத்துவரவேண்டும்.

அறிகருவிகளின் (ஞானேந்திரியங்களின்) செயல் குறைந்து, அதாவது அவற்றின் பயன் நிறைந்தபின் செயல் குறைந்து, செய்கருவிகளின் (கன்மேந்திரியங்களின்) செயல் பெருகவேண்டும். மக்களுக்குப் பயன்படும் நிலையில் இருந்தால் வினை ஒத்துப் போகும்.

இதன்படி, கேட்பவரை விட, பிறருக்குப் பயன் படக்கூடிய முறையில், கருத்தைத் தெரிவிப்பவர், பேசுபவர், பாடுபவர் மோனியாவார். செய்கருவிகளைப் பயன் படுத்தாமல் வீணே வைத்திருப்பது மோன நிலையைத் தராது. இதற்குத் துய்ப்புச் சுருங்க வேண்டும்; தொண்டு பெருகவேண்டும். செயல் செய்வது மோனமாகிறது; ஞானமடைதலாகிறது. எனவே உதவுதல், பாடுதல் முதலிய நற்செயல்களைச் செய்பவர் மோன நிலையை அடைகின்றனர். கைகால்களைப் பயன்படுத்துபவர் தியானிப்பவராகின்றனர்.

காதால் கேட்டு, மோனநிலையைப் பெற்று, செயல் செய்து, வினையை ஒத்து வரும்படி செய்வதோடு, ஒழுங்காகவும் நடந்து கொள்ள வேண்டும். அகத்துப் புறத்தும் ஒழுங்கு முறைகளுண்டு. இயற்கை நியதியே...

ஒட்டி ஒழுகவேண்டும். தியானமும் இயற்கை நியதிப்படி இருக்கவேண்டும். இருந்தால், அது நம்மை ஞான வெளியில் சேர்க்கும்.

கேட்டல் விழிப்பு நிலையில், பூதவெளியில் நடைபெறுவது. பாடுதல் கனவு போன்ற நிலையில் நிகழ்வது. அது மனவெளிக்கு அழைத்துச் செல்லும். ஒழுங்காய் இருப்பது, உயர் வகையான சுழுத்தி நிலைக்கு, நீதி வெளிக்கு உயர்த்தும். உறக்க நிலை என்னும் சுழுத்தி நிலை தன்னை மறக்கும் அளவுக்கு நிகழும் ஒருவகை நுகர்ச்சி நிலையே. இவ்வாறிருந்த பின் முற்றும் அந்நிலையில் அழுந்தி நுகா நுகா அதனைக் கடக்கும் நிலை கைவந்து தியானிப்பது துரிய நிலைக்கு, அருள் வெளிக்கு அழைத்துச் செல்லும்.

இசையோடு கூடிய அருட் பாடல்கள் இவ்வாறு அருள் வெளியை அடைவதற்கு உதவியாய் உள்ளன. எனவே நாம் அவற்றைச் சளைக்க ஓதி நலம் பெற வேண்டும்.

Telegrams: "RAMBROS"

N. RamuBros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழாவில்

13-7-53ல் நடந்த திருமுறைப் பேரவைக்குத் தலைமை தாங்கிய திருப் பெருந்திரு சோம சுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளின் தலைமையுரை:

“இக்கூட்டத்தைக் காணும் போது திருஞான சம்பந்தர் காலம் போலத் தோன்றுகிறது. நாத்திகம் இன்று வளரவில்லை என்பதற்கு இந்தக் காட்சியே சான்று. நாத்திகர்களை இன்னும் வளராதவர் என்று எண்ண வேண்டுமேயன்றி அவர்களைக் கண்டு அஞ்ச வேண்டுவதில்லை.

உடல் நிலையாமை யுடையது. எப்பொழுதாவது பிரிந்துவிடும். அதற்கு முன்னமே நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் ஏன் பிறந்தோம், ஏன் வாழ்கிறோம், என்பவற்றை விலங்குகள் சிந்திப்பதில்லை. நாமும் அவற்றைப்போல வயிறு வளர்த்து இறப்பது வீணாகும். எனவே, நம் முன்னோர் கருத்துக்களை அறிந்து அவற்றின்படி ஒழுகவேண்டும். திருமுறைகளைப் படித்து அவற்றின் பயனைக் கொள்ள வேண்டும்.

நம் மறைவுக்குப் பின் ஒரு வாழ்க்கை இருக்கிறது. அதை நான் ஆராய்ந் திருக்கிறேன். அதைப்பற்றிச் சொல்லும் கடமை எனக்குண்டு. மக்கள் பல திறமைகளைப் பெற்றிருக்கிறார்கள். அத் திறமைகளைத் திருவருள் தருகிறது. இலங்கை சென்று பெரும் பொருள் திரட்டி, அது இன்பம் தருமா என்று பார்த்தேன்.

பொருள் எவ்வளவு இருந்தாலும், திருவருள் இல்லை என்றால், இன்புற முடிவதில்லை. “வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது” என்று திருக்குறள் தெரிவிக்கிறது. அவன் வகுத்தபடி நாம் இன்புற முடியுமே யொழிய நாம் கோடிபணம் தொகுத்தாலும் இன்புற முடியாது. இதை உணரா விட்டால் நாம் துன்புற வேண்டியதே. என் நண்பர் ஒருவர் லக்ஷாதிகாரி. அவருக்குக் காசநோய் வந்திருக்கிறது. மூச்சும் விடமுடியாது. ஒன்றையும் துய்க்க முடியவில்லை.

இறையருளின்படியே நம் வாழ்க்கை நடக்கும். அது நாம் பிறக்கு முன்பே நமது முன்வினைப்படி வகுக்கப் படுகிறது. நமது பின் விருப்பப்படி அது அமைவதில்லை. அதற்கு ஆண்டவனைப்பழிப்பது அறியாமை. நம் வாழ்க்கைக்குக் காரணம் நாமே. நமது ஏன்றவினையின் (பிராரத்துவ) முறைப்படியே நாம் துய்த்தாக வேண்டும்.

நம் இறப்புக்குப் பின் மறுமை வாழ்வில் என்ன தேவையோ அதை நாம் தேடிக் கொள்ளவேண்டும். இறப்புக்குப் பின் செல்லும் அந்தப் பேரூருக்குப் போகப் பொருள் பயன் படாது என்பதை அறிந்து அருளைத் தேடும் பொருட்டு இதில் ஈடுபட்டேன். ‘அருளிலார்க்கவ்வுலகமில்லை’ என்று திருவள்ளுவரும் தெரிவித்திருக்கின்றார். செல்லும் இடத்தில் சிறப்பாய் இருக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டுமென்பதை உணரவேண்டும். அதற்குப் பொருளை அருளாக மாற்ற வேண்டும். அப்படி மாற்று

விட்டால் நம் பொருள் நமக்குப் பயன் படாத தாகிவிடும். மாற்றாமல் சென்றவர் அங்குப் போய் வறியராய்த் துயருறுவர். வள்ளியம்மையார் இங்கே உணவு அளித்துப் பொருளை அருளாக மாற்றுகிறார்.

பொருள் இல்லாதவரும் அருளைத் தேடலாம். பிட்டு வாணிச்சி அருளைத் தேடியதை விட நாம் ஒன்றும் அதிகமாகப் பெறவில்லை. அருளைத் தேடுவதற்கு உடலும் உள்ளமுங்கூடப் போதும். கூலி வாங்காமல் பணி செய்வது அருளைப் பெறும் வழியாகும். பொருளைப் பெறுவதை விட அருளைப் பெறுவது எளிது. ஆனால், உலகில், அருளைத் தேடுவதற்கான முயற்சிகள் அவ்வளவாகக் காணப்படவில்லை.

பிறர் நன்றாக இருக்க வேண்டுமென்று எண்ணவேண்டும் அது, இறைவன் வேலை. இச்செயலைச் செய்யத் துணிந்து விட்டால் இவ்வுலகத்தில் வேலை முடிந்து விடுகிறது. அடுத்த நிலைகளுக்குச் செல்லும் தேர்ச்சியைப் பெற்றுவிடுகிறோம்.

நமக்கு நுண்ணுடல் உண்டு. சொப்பனத்தில் தொழிற்படும் உடலே அது. பருஉடலை விட்டுப் பிரிந்தபின் அது உயிரோடு போகும். அத்துடன் நாம் இப்பிறவியில் செய்யும் வினைகளும் செல்கின்றன. வினையை வளர்த்துக் கொள்ளாமல் இருந்தால் பிறவியறும். இன்றேல் மீண்டும் மீண்டும் பிறக்க நேரும்.

நம்மைப் படைத்தவன் ஆண்டவன் என்பதை உணர்ந்து, அவன் கருணையையும், நம் சிறுமையையும், அவன் எண்ணத்தையும், நாம் செய்ய வேண்டுவதையும், எண்ணிச் செய்து பிறவியை நீத்துக் கொள்ள வேண்டும். இதற்குத் திருமுறைகளைப் பயின்று பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

தீக்ஷை என்பது ஆண்டவன் சத்தியைப் பெற்றவர் அதனை மற்றவர்களுக்குக் கொடுப்பது. தீக்ஷை செய்து கொண்டு மந்திரங்களை ஓதவேண்டும். அதோடு அவன் சின்னங்களையும் அணிய வேண்டும். மற்றத் துறைகளுக்கு ஏற்ற ஆடை அணிகளை அணிவதைப் போலவே இறைவனை வணங்க அவன் சின்னங்களை அணிவது இன்றியமையாத தாகின்றது.

—:—:—

PHONE 55034 TEL. ENKAYAM

கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53, கிடங்குத்தெரு சென்னை 1.

(4ம்-பக்கம் தொடர்ச்சி)

பக்த ஜனசபையினரின் இசைப் பாட்டும் உருக்கமாக நடைபெற்றது.

மாலை 6–மணிக்கு நால்வர் கோயிலில் வழிபாடும், மாணிக்கவாசகர்க்கு ஊசலும், குருகுல அன்பர், திரு. நாகேந்திரன், திரு. சிட்டிபாபு இவர்கள் குழுவினரின் ஊக்கமான இசையரங்கும் நடைபெற்றன.

இரவு அடிவாரத்தில் இசையரசர் எம்.எம். தண்டபாணி தேசிகரவர்கள் பல்லாயிரக்கணக்கான மிகப்பெருங்கூட்டத்தினிடையே வெண்நிலவு போல் அமர்ந்து இனிய உள்ளத்துடன் அரிய பெரிய தமிழிசையரங்கு நிகழ்த்தியுதவினர்.

இறுதியில் திருக்கூட்டச் செயலாளர் திரு. **M. R.** சம்பந்த நாயகர் அவர்கள் நன்றி கூற, ஆசிரியர் அவர்களும் இன்னுரை கூறி எல்லோரையும் வாழ்த்தியருள விழா திருவருளுதவியால் இனிது நிறைவெய்தியது.

—ந. ரா. ஆடலரசு.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்விழாவில் சில குறைபாடுகளும் இருந்தன. அவை நம்மிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்மையால் விளைந்தவை. கூட்டம் பெருகப் பெருக ஒழுங்கும் கட்டுப்பாடும் உடன் வளரவேண்டும். திருவருள் துணையும், ஆசிரியர் அவர்களின் எண்ண ஆற்றலும், பெருமக்களின் ஆதரவும் பொங்கி வருவதால் விரைவிலேயே இது உலக விழாவாக மலரும். மன்பதைக்கு அருளடிப்படையில் நல்ல உலகியல் வாழ்வுப் பாதையைக் காட்டிக் கொண்டு, கலங்கரை விளக்காக ஒளிரும்.

—மெய்கண்டான்.

பதிப்பு அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாமபாக்கம்; மதுராந்தகம் (அஞ்)